(1889)

# இந்துசாதனம்.

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரக் கிரயம்.**

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: | ஒல 1-க்கு | ரூ. 5-60 |
| வெளியூர், இந்தியா: | ,, | ரூ. 9-40 |
| தொடுவாய்ப்பகுதி: | ,, | ரூ. 9-40 |
| தனிப்பிரதி: | | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| முதன்முறைக்கு:—ஒருகலம் | | ரூ. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரூ. 5-00 |
| ,, | கால்கலம் | ரூ. 3-15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு டை விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—கரு. } யாழ்ப்பாணம்:—இரத்தாட்சிஸு வைகாசிமீ கஉ ( 1924 மே 26 ) திங்கட்கிழமை. { இலக்கம்—அரு.


உ


கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ளீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்தவிநாயகன்றாள்வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## வி ள ம் ப ர ம்.

பல தலைமுறையாய் பிரபலபிரசித்தியடைந்த
வீ. ஸாமி அய்யங்காருடைய
**அரைக்கீரை விரைத் தைலம்.**



இதன் குணம்:

பித்த மேகநீரானது சிரசுக்கேறி அதனால் கண்மறைப்பு, கண்ணெரிச்சல், கண்புகைச்சல், கண்ணிலிருந்து நீர்வடிதல், ஒருதலைவலி, இருதலைவலி, பீனிசம், காதினால் சீழ்வடிதல், காது இரைச்சல், காதுவலி, ஐந்துவருஷத்திற் குட்பட்டதாயும் இரைச்சலோடுங் கூடிய காதடைப்பு, கரப்பன், தேமல், சிரசில் மயிர் உதிர்தல், சொண்டுவிழுதல் முதலான ரோகங்களை நிவர்த்திப்பதுமன்றி மயிரை நன்றாய் வளரச்செய்யும். இந்த நோட்டீசில் காணப்படாத கழுத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளையும் அனுகூலப்படுத்தும். மேற்கண்ட வியாதியில்லாதவர்கள் தேய்த்து ஸ்நானம்பண்ணினால் தேகத்திற்குக் குளிர்ச்சியையும் ஆரோக்கியத்தையுங் கொடுக்கும். வாரத்திற்கு இரண்டுதடவை காலை 8 மணிக்குள் வெந்நீரில் சீயாக்காய்தேய்த்துஸ்நானஞ்செய்து யாதொரு பத்தியமுமின்றி உடனே போஜனஞ் செய்து கொள்ளவேண்டும். 8 நாள்வரையிலும் சுகந்தம் மாறாது. அன்று பகலில்மாத்திரம் தூங்கக்கூடாது. 10 பலங் கொண்ட புட்டி 1-க்கு கிரயம் ரூபா 1—10—0.

பாக்கிங் போஸ்டேஜ் பிரத்தியேகம். வெளிநாடுகளுக்கு வி. பி. இல்லாததால் முன்பணம் அனுப்பவேண்டும்.

வி. எஸ். கோமளத்தம்மாள்,
மானியுபாக்யசுரர்,
8, பிராடீஸ் ரஸ்தா, மைலாப்பூர்.
(Y. 26.)

## விளம்பரம்.

எக்சர்சைஸ் கொப்பிகள் { குரோஸ் விலை 16-50, டசின் ,, 1-50, தனிக்கொப்பி ,, 13 } ரூ. ச.

இன்னும் கல்லூரிகள் தமிழ்ப்பாடசாலைகளுக்குத் தேவையான புத்தகங்கள் மற்றுங்கொப்பிகள் இவ்விடம் மலிவாகக் கிடைக்கும்.

## பிரேதப் பெட்டிகள்.

தேக்கம்பெட்டி, முதிரைப்பெட்டி, பலாப்பெட்டி, மற்றும் சாதாரண பெட்டிகள் சோடினை தைத்தும் தையாமலும் விற்பனைக்கிருக்கின்றன.

ம. வஸ்தியாம்பிள்ளை,
(M. 34.) கச்சேரித்தெரு, யாழ்ப்பாணம்.

இனம்! இனம்!! இனம்!!!

இதனடியில் கண்ட மருந்து வாங்குகிறவர்களுக்கு மட்டில்

வைத்திய சாஸ்திரத்தில் அதிக அனுபவமுள்ள ஹக்கீம் K. முகம்மது யூசுபு அவர்களால் செய்யப்பட்ட (வைத்திய சாஸ்திர நீதிநூல்) 96 பக்கம் அடங்கிய புஸ்தகம் ஒன்று இம்மருந்துடன் இனமாக அனுப்பப்படும். மானிட சரீரத்தில் பரவும் பல நோய்கள் வீரியபலஹீனங்கள் நரம்புத் தளர்ச்சிகள் வீரிய நஷ்டத்தின் விபரங்கள் அது ஜனித்த காரணங்களையும் அதன் குணங் குறிகளையும் அதற்கு மருந்தும் பரிகாரமும் சரீரத்தில் உள்ள சில ரகசியமான விஷயங்களையும் வைத்தியரிடம் வெளிப்படுத்தாமல் தனக்குத் தானே அறிந்துகொள்ளக்கூடிய அருமையானதோர் சாஸ்திரமாயிருக்கின்றது.

அவுஷதங்களில் அருமையான வித்தை.

ஜெகப்பிரசித்தி பெற்ற

# சிட்டுக்குருவி அமிர்த லேகியம்.

பலமில்லாமல் தளர்ந்து சோர்வடைந்த நரம்புகளையும் உலக வாழ்க்கையில் பிரியமில்லாமல் சஞ்சலப்படும் மனதையும் ஒருவேளை லேகியம் சாப்பிட்ட பிறகு ஆச்சரியப்படும்படி நரம்புகளுக்குப் பலமும் திமிரும் உண்டாக்கும்.

பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதமுள்ள உண்மை அவுஷதம்
குணமில்லையென்று ரூபிக்கிறவர்களுக்கு பணத்தைத் திருப்பிக் கொடுக்கப்படும்.

வீரியபுஷ்டியையும் மன உற்சாகத்தையும் கொடுப்பதில் இதற்குச் சமயாய் எதைக் காட்ட முடியும். இதனை அனுபவித்தவர்கள் இப்பெருமை தங்கிய மருந்திற்கு உள்ள அபூர்வசக்தியைப் போலே இவ்வுலகத்தில் வேறு எந்த மருந்திற்கும் இல்லையென்று அனேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் எழுதியிருக்கிறார்கள்.

அன்பனே! இதுவரையிலும் வீரியதத்துவத்திற்காகவும் நாடி நரம்புகளின் உற்சாகத்திற்காகவும் மூளையைப் பலப்படுத்தி ஞாபகசத்தியை விர்த்திசெய்யவும் தேககாங்கையினால் நீற்றுப்போகும் பலஹீனம் பற்பல வாய்வுரோகம் இடுப்புவலி கைகாலசதி மலச்சிக்கல் பசிமந்தம் இவைகளுக்கெல்லாம் எத்தனையோ விதமான அவுஷதங்கள் சாப்பிட்டிருப்பீர்கள். அவைகளுக்கெல்லாம் இது முதல்தரமான மருந்தென்று தங்களின் சினேகிதர்பால் புகழ்ந்து பேசுவீர்கள். பத்தியமில்லை.

முக்கிய கவனிப்பு:—சில போலி சிட்டுக்குருவி லேகியங்கள் ஆயிரக்கணக்கான ரூபாய் இனமென்று சபதங்கள் கூறிக்கொண்டு பல விளம்பரங்கள் வெளியிட்டுக்கொண்டிருக்கிறபடியால் எமது விலாசத்தைக் கவனித்து ஆடர் செய்யவேணும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 40 நாள் | 80 வேளை | டப்பி 1க்கு | விலை | ரூபா | | 10—0—0 |
| 20 ,, | 40 | ,, | ,, | ,, | ,, | 5—0—0 |
| 10 ,, | 20 | ,, | ,, | ,, | ,, | 2—8—0. |

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

இந்தியா, பர்மா, சிலோன் இம்மூன்று தேசங்களுக்கும் வி. பி. யில் மருந்து அனுப்புவோம். பினாங்கு, சிங்கப்பூர், மற்ற மலாய் தேச வாசிகள் மருந்தின் கிரயமும், பார்சல் சிலவு ரூபா 2ம் சேர்த்து முன்பணம் அனுப்பினால் மட்டில் மருந்து அனுப்பப்படும்.

விலாசம்.

ஹக்கீம் கா. முகம்மது யூசுபு,
முகம்மதியா வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, (தென்னாற்காடு ஜில்லா)
(H. 27.)

Hakeem K. Mohamed Yoosoof,
*Mohamedia Medical Hall,*
Porto-Novo, S. A. Dt.(INDIA).

## புத்தக விளம்பரம்.

தெல்லிப்பழை பிரமஸ்ரீ வித்துவான் சிவானந்தையரால், இயற்றிய புத்தகங்கள் என்னிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

1. தருக்கசங்கிரகம், நியாயபோதினி, பதகிருத்தியம், அன்னம்பட்டீயம், நீலகண்டீயம், சேர்ந்த கட்டுவிலை ரூபா 2 00
2. நம்பி அகப்பொருளுரை ரூபா 1 00
3. இரகுவமிசம் மூலமும் உரையும் முற்பாகம் ரூபா 1 சதம் 50
4. சனிதுதி விலை அணா 1
5. நசகாரியம் அணா 5

க. செல்லம்ஐயர்,
சிவன்கோவில் வடக்குத்தெரு,
வண்ணார்பண்ணை.

சண்முகநாதன் புத்தகசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம். (H. 26.)

## திறமானமங்களூர்ஓடுகள்

மெஸ்சேர்ஸ் மோர்க்கன் அன்கோ அல்வாரிஸ் அன்கோ திறமோடுகளும் அரையோடுகள், முகட்டோடுகள், காற்றோடுகள், பீலியோடுகள், கண்ணாடியோடுகள், சித்திர சகிதமானஓடுகள் தளவரிசைக்கற்கள், பூச்சட்டிகள் திறம் போட்லாந்து சிமெந்து முதலானவைகளும் சகாயமான விலைக்குப் பின்வரும் விலாசத்தாரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

கா. வ. சுப்பிரமணியம்,
ஓட்டுக்கம்பெனி,
தேவரீர்குளம்,
(H. 23). யாழ்ப்பாணம்.

# பித்தளை விளையாட்டுச் சாமான்கள்.

அழகும், பளபளப்பும் உள்ளது. இந்துக்கள் வீட்டில் சமையல் செய்யும் பாத்திரங்களைப் போன்ற வடிவுள்ளது. ஒவ்வொரு ஜோடிப்பிலும் 32 விதசாமான்கள் அடங்கியுள்ளன-

| | | | |
|---|---|---|---|
| 1 தெ. ஜோடிப்பு | 1க்கு | ரூபா 4 | அணா 8 |
| 2 தெ ,, | ,, | ரூபா 3 | அணா 4 |
| 3 தெ ,, | ,, | ரூபா 2 | அணா 8 |

கே. எஸ். முத்தையா & கம்பனி,
"ஸில்க் ஹவுஸ்" காசி.
(Y. 29.)

## "ஸ்ரான்டேர்ட்" கொழுக்கியோடுகள்.

(Standard Tiles)

பின்வரும் நியாயங்கள் பற்றியே நாம் இந்த ஸ்ரான்டேர்ட் ஓடுகளைத் தருவித்து விற்கின்றேம்:—

முதலாவது, இந்தஓடுகள்மிகப்பாரங்குறைந்தனவும்.

இரண்டாவது, இவைகள்நெடுங்காலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கன.

மூன்றாவது, இந்த வட இலங்கையின் தேசசுவாத்தியத்திற்கு இயைந்தஓடுகள்இவைகளேயாம். இந்த ஓடுகள்உஷ்ணகாலங்களிற்குளிர்ச்சியையும் சீதளகாலங்களில் உஷ்ணத்தையும் தரும் தன்மையன.

இந்த ஓடுகளைச் சென்ற மூன்றுவருடகாலமாக நாம் தருவித்து விற்றுவருகின்றேம். இந்த மூன்றுவருட காலத்துள் நாங்கள் ஆச்சரியப்படத்தக்க விதமாக இவை செலவழிகின்றன. மற்றும் ஓடுகளிலும்பார்க்க இது சிறந்ததென்பதற்கு இந்த ஒருநியாயமுமே போதிய சான்றாகும்.

ஓடுகள்யாழ்ப்பாணத்திலும் வல்லுவெட்டித்துறையிலும், பருத்தித்துறையிலும் எங்களிடம் பெறற்பாலன.

S. வீரகத்திப்பிள்ளை.

தந்திவிலாசம்,
"Ruby" வல்லுவெட்டித்துறை.
(H. 25.)

## புத்தக விளம்பரம்.

| (தபாற்செலவு வேறு). | ரூ. | ச. |
|---|---|---|
| பாரதம் ஆதிபருவவுரை | 3 | 25 |
| டை சபாபருவவுரை | 2 | 25 |
| டை இரண்டும் ஒரே முறையில் | 5 | 00 |
| தொல்காப்பியம் எழுத்ததிகாரம்-நச்சினார்க்கினியம் | 4 | 50 |
| டை சொல். சேனாவரையம் | 4 | 00 |
| அகப்பொருள் விளக்கவுரை (குமாரசுவாமிப்புலவர்பதிப்பு) | 1 | 75 |
| டை சிவானந்தையர் பதிப்பு | 1 | 00 |
| இலக்கியச் சொல்லகராதி | 1 | 75 |
| சித்தியார் சுபக்கம் இருவருரை | 5 | 00 |
| டை மு. திருவிளங்கம் பதிப்பு 4-பகுதிகள் | 2 | 10 |
| திருவுந்தியார், திருக்களிற்றுப் படியாருரை | 0 | 50 |
| தத்துவப்பிரகாசவுரை | 1 | 75 |
| திருக்குறள் சரவணப்பெருமாளையருரை | 3 | 75 |
| இரகுவமிசவுரை (முதற்பாகம்) | 1 | 50 |
| தருக்கசங்கிரகம் | 2 | 00 |
| ஜாதகபாஸ்கரன் | 3 | 50 |
| இராமாயணநாடகம் | 2 | 25 |
| இராமாயணம் பாலகாண்டம் அரும்பதவுரை | 2 | 00 |

விலாசம்:— மானேஜர்,
சோதிடப்பிரகாசயந்திரசாலை,
(Q. 47.) கொக்குவில், யாழ்ப்பாணம்.

## தேக்க மரம்.

றங்கூனிலுள்ள பேர்போன அங்கில கொம்பனியாரிடமிருந்து புதிதாக வருவிக்கப்பெற்றதிறமான தேக்கமரங்கள். நீளம் 6 அடி தொடக்கம் 30 அடி வரையிலுள்ளன. கனம் 12 அங்குலம் தொடக்கம் 20 அங்குலம் வரையிலுள்ளன. இவைகள் எப்பிடத்தில் விலைக்கிருக்கின்றன, விலைவிபரத்திற்கு எமக்கெழுதவும்.

S. வீரகத்திப்பிள்ளை,
தொண்டமானாறு.

தந்திவிலாசம்:—
ரூபி. வல்லுவெட்டித்துறை.
(H. 29.)

# இந்துசாதனம்

யாழ்ப்பாணம்:— இரத்தாட்சி௵ வைகாசி௴ 13௳ திங்கட்கிழமை.

## ஐயோ! நாங்கள் இருப்பதா? சாவதா?

கேட்கத் தலை விறைக்கின்றது; நினைக்க மனம் பதறுகின்றது. கைகால் நடுங்குகின்றன. முதல் நிமிஷமிருந்தவர் அடுத்த நிமிஷமில்லை. மோட்டர் இயமனால் ஆபத்துக்கள் வரத் தொடங்கிக்கொண்டன. இனிப் பேராபத்து வரப்போகின்றதென்று ஒருமுறை இருமுறை மும்முறை சொன்னோம்; அதிகாரிகளுக்கு ஓலமிட்டோம். நமது அரசசக்கரவர்த்தியின் பிரசைகளின் சீவன் இந்த யாழ்ப்பாணத்திற் சிலகாலமாக அபாயமான நிலையிலிருக்கின்றதென்று அழுதோம். இந்த மோட்டா ரதங்களால் வரும் அபாயங்களை நீக்குதற்கு ஆகவேண்டிய வழிகள் இவை இவை யென்று சொல்லி அவற்றை அனுசரிக்கும்படி அரசினரை யிரந்தோம். ஏழைகளின் பிரலாபத்தைக் கேட்பார் யார்! சிந்திப்பார் யார்! எவருமில்லை.

ஆறுநாட்களுக்கிடையில் இரு பெண்கள் வண்ணார்பண்ணையில் அரைமைல் தூரத்துள் அநியாயமாக மாண்டார்களே! இக்கொலைக்கு யார் பொறுப்பு. தன்னாலுந் தன் பரிசனத்தாலும் கள்வராலும் பகைவராலும் துஷ்ட மிருகங்களாலும் பிரசைகளுக்குவரும் பயம் ஐந்துந் தீர்த்து ஆள்வதன்றோ செங்கோன்மன்னர் கடனாகும். சென்ற திங்கட்கிழமை சங்கரத்தையிலிருந்து இங்குள்ள சிவன்கோயிலுக்குச் சுவாமிதரிசனஞ் செய்யும்படி வந்த மனுஷியாம். சிறிது காது கேளாதாம். ஆனபடியாற் பட்டப்பகலில் மோட்டர் ரதம் நெரித்து அந்தக்ஷணமே கொன்றுவிட்டதாம். மோட்டர்ரதம் ஓட்டியவன் நிரபராதியாய்விட்டானும். ஆ! இது என்ன விந்தை, மனுஷிக்குக் காது சிறிது கேளாவிட்டமையினால் இவனுக்கும் பட்டப் பகலிற் கண் தெரியாமற்போய்விட்டதா?

இனி, சென்ற சனிக்கிழமை நடந்த பரிதாபச் செயல் கண்ணாற் பார்க்கத்தக்கதா! வாயாற் சொல்லத்தக்கதா! தாய் தன் குழந்தை தெருவிற் செல்வதையும் மோட்டர் யமன் கொல்லுதற்கு எதிரே வருவதையுங் கண்டு ஓடிப்போய்ப் பிள்ளையை மீட்டாள். தான் அகப்பட்டு நெரியுண்டு உடனே மாண்டாள். இந்த அனர்த்தமெல்லாம் இரண்டு மூன்று நிமிஷத்துள் நடந்துவிட்டன. ஒரு நிமிஷத்தில் ஆறு ஏழு பிள்ளைகள் தாயைத் தின்னிகளாயின. நாயகன் அமங்கலனாயினன். இப்படியானால் சனங்களின் சீவனுடைய பாதுகாப்பெங்கே? அம்மை வந்து சாகிலும் ஆறு ஏழுநாட் செல்லுமே. பேதி வந்து மாளுகினும் இரண்டு மூன்றுநாட் செல்லுமே. கொள்ளைநோயானாலும் கொஞ்சநாட்செல்லுமே. ஐயோ, துடிக்கப்பதைக்க வதைக்கப்படவேதென்றால் இதை யார்தான் சகிப்பார்! யார்தான் பொறுப்பார்! இதற்கு யார்தான் கலங்கார்! யார்தான் நடுங்கார்.

பெற்றார் தங்கள் பிள்ளைகளையும் பெண்டிர் தங்கள் நாயகரையும் வெளியே செல்லவிடப் பயப்படுகின்றார்களே! பள்ளிக்குச் சென்ற பிள்ளை வீட்டிற்கு வந்தபின்பே அன்னை மனம் ஆறுதலடைகின்றாள். கருமார்த்தமாக வெளியே சென்ற நாயகன் மீண்டு வரக் கண்டபின்னரே மனைவி மனப் பயம் நீங்குகின்றாள். இருவர் ஒருவரையொருவர் சந்தித்துப் பேசிப் பிரிந்து போகும்போது "மோட்டர்காருக்குச் சீவன் தப்பிப்பிழைத்திருந்தால் நாளைக்குச் சந்தித்துக் கொள்வோம்" என்றுசொல்லிப் பிரிந்துபோகுங் காலமும் வந்துவிட்டதே.

சென்ற சனிக்கிழமை குறித்த மனுஷியை நெரித்துக் கொன்ற மோட்டர்ரதச் சாரதியைப் பார்த்தால் அவனுக்கு யாராயினும் ரதமோட்ட அநுமதி (லைசென்ஸ்) கொடுப்பார்களா? இவன்போல்வாருக்குக் கொடுக்கப்படும் "லைசென்ஸ்" ரதமோட்டுவதற்கல்ல ஆட்களைக் கொல்லுவதற்குத்தான் ஆகுமென்றல்லவா அச்சமையத்தில் அங்கு நின்றவர்களெல்லாரும் பேசிக்கொண்டார்கள். இந்த மோட்டர் அபாயங்களைப்பற்றி இப்பத்திரிகைவாயிலாகப் பலமுறை கையலுக்க மனஞ்சலிக்க எழுதிவிட்டோம். இனிமேல் எழுதுவதால் ஏதும் பயன்படுமெனத் தோற்றவில்லை. இங்குள்ளாரெல்லாம் பெருந்திகிலோடு காணப்படுகின்றார்கள். இனிச் செய்யத்தக்கது ஒன்று உண்டு.

வடமாகாணப் பிரதிநிதியெனவிருக்கும் கௌரவம் பொருந்திய ஐயா துரைசுவாமியவர்களே! இங்குள்ள சனங்கள் நாளுக்கு நாள் இப்படி அநியாயமாக மோட்டர் ரததினால் கொல்லப்படுவரேல் தாங்கள் பின் யாருக்குப் பிரதிநிதியாகவிருக்கப்போகிறீர்கள்!! இந்த யாழ்ப்பாண வாசிகளுக்கு இப்பொழுது நேர்ந்துகொண்டுவரும் பேராபத்தை நீக்குவது தங்கள் கடனாகும். ஆதலால் தாங்கள் தலைமைவகித்து, இந்த வாரத்திலேயே ஒரு தினத்தைக்குறித்து முற்றவெளியில் ஒரு மகாசபை கூட்டுதல்வேண்டும். மோட்டர் ரதங்களால் நேரும் போராபத்துக்களை நீக்குதற்கான வழிகள் எவையென்பதை அந்தக் கூட்டத்தில் நன்கு யோசித்து ஆகவேண்டிய சில நிர்ணயங்களை நிறைவேற்றி அரசினருக்குத் தெரிவித்து அவற்றை அனுசரிக்கும்படி அரசினரைக் கேட்டல் வேண்டும். இப்படிச் செய்தாற்றான் இங்குள்ள சனங்கள் சீவமோசமும் திகிலும் நித்திய சஞ்சலமுமின்றி வாழுதல் முடியும்.

## வைதிகசைவர்கள் வழிபடுங்கடவுள் மும்மூர்த்திகளுள் ஒருவராகிய உருத்திரரா?

(வண்ணை நகர் ஸ்ரீ க. வைத்தியலிங்கபிள்ளை எழுதியது.)

சுத்தாத்துவித வைதிக சைவசித்தாந்திகள் அநவரதமும் வழிபடுங்கடவுள், பிரமா விஷ்ணு உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளினும் மேற்பட்டவராய் நான்காவதாயுள்ள துரிய சிவத்தையே வழிபட்டுவருகின்றார்கள்; அவரைச் சுத்தசிவம் என்றும், துரியருத்திரர் என்றும், ஜனன மரண ரகிதர் என்றும், அறவாழியந்தணன் என்றும், அநாதிநித்தியர் என்றும், ஈசன் என்றும், சுயம்பு என்றும், சச்சிதானந்தன் என்றும், எண்குணன் என்றும், பரஞ்சோதி என்றும், பராபரன் என்றும், மகேச்சுரன் என்றும், தேவாதிதேவன் என்றும், பூரணன் என்றும், முத்தொழிற்கிறைவன் என்றும், பரமேட்டி என்றும், வேதசிவாகமங்களிற் கூறப்பட்டிருக்கின்றன. மும்மூர்த்திகளும் மலரகிதராகிய துரியசிவனால், படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழில்களையும் நடாத்துதற்கு நியமித்த அதிகாரகர்த்தர்களாவசர்கள். அவர்கள் பசுவர்க்கத்துட்பட்டவர்களே! இவர்கட்குச் சநநமரண முண்டென்பது தேற்றம். இது பற்றியே வேத சிவாகமங்களில், "அயன் அரி உருத்திரன் ஆகண்டலன் முதலிய அண்டர் எவரும் பிறக்கின்றனர். பூதங்களோடு இந்திரியங்களும் பிறக்கின்றன. கருவி கரணங்களைத் தோற்றுவிப்பானும், தியாதாவுமான துரியருத்திரனே பிறப்பிறப்பற்றவன். அனைத்திற்கும் ஈசுவரனும் சம்புவுமானவனே ஆகாய நடுவிற் றியானிக்கப்படுகிறான். மூன்றவத்தைகளையுங் கடந்ததும், துரியசிவமாயுள்ளதும், சத்தியமும் ஞானமுமாகவும் உள்ளதும், பிரமன் முதலிய மும்மூர்த்திகளாலுஞ் சேவிக்கப்படுவதும், எப்பொருட்களும் பிறத்தற்கு நிலைக்களமாகவுள்ளதும் எம்தா அதே ஈச சப்தவாச்சியப்பொருள். அவன் எல்லாப் பக்கங்களிலும் விழிகளும், எல்லாத்திசைகளிலும் முகங்களும், எல்லாத்திசைகளிலும் புயங்களும், எல்லாத்திசைகளிலும் பாதங்களு முடையவனும் ஆகாயத்தையும் பூமியையும் உண்டுபண்ணி, அத்துரியருத்திரன் ஒருவனே முழுமுதற் கடவுளாயிருக்கின்றான்" என்று அறுதியிட்டுக் கூறப்பட்டிருக்கின்றன. இவ்வாறே "தேவர்கோ வறியாத தேவ தேவன் செழும்பொழில்கள் பயந்து காத் தழிக்கு மற்றை மூவர்கோனாய் நின்ற முதல்வன் மூர்த்தி மூதாதை மாதாளும் பாகத்தெந்தை" என்று சிறந்த தமிழ்வேதமாகிய திருவாசகத்தில் மணிவாசகப்பெருமானும், "மூவர்க்கும் முன்னவன்காண்!" "மூவரையும் பயந்தவன்காண்" என்று வாகீசப்பெருந்தகையாரும் "மூவரு மடி தொழுமிறை" என்று காழிப்பிரானும், "ஒருருவை வித்தகனை மூவரிலொருத்தரென வோதியிடு மற்பமதியீர்" என்று சைவ எல்லப்ப நாவலரும், "மூவா முதலா முதல்வனையு மூவுலகிற் சாவார்பிறப்பார் கடங்களையுந்- தேவாக - ஒக்கநினைவாருக் கல்லவோ வோரேழு மிக்க நரகம் விதித்தது காண்" என்று சைவ இரட்டையரும் கூறியருளினார்கள். இன்னும் அத்துரிய சிவத்தின் வல்லமையாகிய பராசத்தியாரைத் துதித்த அபிராமிப்பட்டரும் "பின்னே திரிந்துன்னடியாரைப் பேணிப் பிறப்பறுக்க, முன்னே தவங்கள் முயன்றுகொண்டேன் முதன் மூவருக்கும் அன்னே" என்றுங் கூறினார். இவ்வுண்மைகளை நுணுகி ஆராய முடியாத அஞ்ஞானிகள் மும்மூர்த்திகளிலொருவராகிய குணருத்திரரையே சைவர்கள் வழிபடுகிறார்களென உளறிவழிவர். உருத்திர பேதங்களைச் சொல்லப் புகின், வடகீழ்த்திசைத் தலைவர் ஈசானருத்திரர், காலாக்கினிருத்திரர், ஆடகேச ருத்திரர், பதினொருருத்திரர், பதினொருகோடி ருத்திரர், சாரூபபதத்தில் ருத்திர வடிவத்தோடு பொருந்திய அடியார்கள், இன்னும் விரிவஞ்சி விடுக்கப்பட்டவர்களனைவரும் உருத்திரவகுப்பிற் சேர்ந்தவர்களே. இவர்களில் சுவர்க்க உலகத்திலுள்ள பதினொரு உருத்திரரும், அருச்சுனன் காண்டாவன தகனஞ்செய்த ஞான்று, இந்திரனுக்குப் படைத்துணையாக வந்து பார்த்தனுடெதிர்த்து அவனோடு அமர்புரிய ஆற்றாது புறமுதுகிட்டோடினார்களென்று மகாபாரதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. இத்தகைய கேவல நிலையிலுள்ள உருத்திரகூட்டத்தில் ஒருவரையே சைவர்கள் கடவுளாக வணங்குகிறார்களென்று நிஞ்சித்தேனு மஞ்சாது கண்டனபுத்தகங்களெழுதித் தூஷிக்கும் அஞ்ஞானிகளது கை என்படும்! தூஷித்த நா என்படும்! அவ்வுருத்திரகோடிகள் காளகண்ட திரிநேத்திர மான் மழு அபயவரதங்கள் பொருந்திய சிவவடிவங்களாயிருத்தல்பற்றி அவர்களை வைதிகசைவர்கள் அடியார் வணக்கமாக வழிபடுவர். அன்னாரைப் பதிவணக்கமாக ஒருபோதும் வழிபடமாட்டார்கள். விபூதி, உருத்திராட்சம், காஷாயம் முதலிய சிவசின்னங்களைத் தரித்தவர்களை வழிபடுஞ் சைவர்கள், மேற்போந்த உருத்திரர்களை அடியார்வணக்கமாக வழிபடுவதினால் வருமிழுக்கென்னோ? இவ்வஞ்ஞானிகள் கல்வியறிவும் சமயவுணர்ச்சியுமற்ற தாழ்ந்த சாதியினரை, ஊண் உடை பணம் முதலியவைகளை வேண்டியபடி கொடுத்து, எங்களைப்போல உங்களுக்கும் சம உரிமை தந்து நடத்துவோமென அழைப்பித் தங்கள் மதத்திற் சேர்க்கின்றார்களேயன்றி, கல்வியறிவும் சமயவுணர்ச்சியுமுள்ள அறிவாளிகளிடத்தில், இவ்வாஷாடபூதிகளின் பாசாங்குகள் அணுத்துணையும் பலிக்கமாட்டா.

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே! நமது சமயத்தின்மீது அஞ்ஞானிகள் பிதற்றும் ஆக்ஷேபங்கட்குச் செவிசாயாது சிவான்மாக்கட்குள் பரான்மாவாயிருப்பவரும் அடியார்க்கெளியரும், மலரகிதருமாகிய சிவபெருமானை மனமொழி மெய்களால் வழிபட்டு உய்யக்கடவோமாக.

## சமாசாரம்.

ஒரு மாற்றம்:—இந்துசாதனம் 87-ம் இலக்கப்பத்திரிகையிலே "பஞ்சாமிர்தம்" என்னும் பத்திரிகைக்குறிப்பில் "இதன் வருடச்சந்தா ரூபா ஆறு தனிப்பிரதி அணா பத்து" என்பதை வருடச்சந்தா ரூபா ஐந்து தனிப் பிரதி அணா எட்டு எனத் திருத்திக்கொள்க.

திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகளின் குருபூசை:—இந்தமாதம் 8௳ புதன்கிழமை தெல்லிப்பழை, காசியிற் பிள்ளையார் கோவிலில்பகல் மாகேசுரபூசைநடைபெற்றது. இரவு திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளின் திவ்விய சரிதம் தேவாரபாராயணத்துடன்பக்கவாத்தியசகிதம் சங்கரலிங்க சுவாமிகளால் கதாப்பிரசங்கமாகச் செய்யப்பெற்றது.

புயலும் பெருமழையும்:—சென்ற செவ்வாய்க்கிழமை கொழும்பிலும் களனியாற்றின் கரையோரத்தை அடுத்த இடங்களிலும் புயலும் பெருமழையும் இடி முழக்கமுமுண்டாயின.

முடிக்குரியமரங்கள் களவுபோனமை:—வனபரிபாலனப் பகுதியாரால் புகைரதப் பகுதியாருக்கு(தளவா ஸ்டேசனிற்) கொடுக்கப்பட்ட 70 மரங்கள் மாயமாய்மறைந்தமையைப் பற்றி இப்பொழுதுவிசாரணை நடைபெறுகின்றது.

பெண்ணால் மாண்டான் பெண்ணும் மாண்டாள்:—சென்ற வாரம் அநுராசபுரத்தில் வசிக்கும் வீராசாமி என்னும் ஒருவன் தன்மனைவியின் படிற்றொழுக்கத் தலைவனாகிய வெங்கடாசலமென்பவனைக் கத்தியினாற் குற்றிக்கொன்று தன் மனைவியையும் மூன்று இடங்களில் படுகாயமுறக் குற்றினான். அவளும் பொலிஸ் நீதிபதிக்குத்தனது வாய்ப்பிறப்பைக் கூறிச் சிறிது நேரத்தில் இறந்து விட்டாள்.

கௌரவதம்பிமுத்துவும் முதலியார் கனகசபையும்:—கௌரவஸ்ரீ தம்பிமுத்து அவர்கள் ஒரு உத்தியோக நியமனத்தின் பொருட்டு ஒருவரிடம் 1000 ரூபா பெற்றுக்கொண்டு கீழ் மாகாணஏசன்றரைத் தூண்டினரென்று முதலியார் கனகசபையவர்கள் கொண்டுவந்த அபவாதத்திற்காக ஷைமுதலியார்மீது ஒரு வழக்குத் தொடர்ந்திருக்கிறார். இவ்வழக்கிற் சம்பந்தப்பட்ட முதலியார் கனகசபையும் முதலியார் வல்லிபுரமும் கீழ்மாகாண ஏசன்றர் அவர்களும் உடையார் சபாபதிப்பிள்ளையும் சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்டபின்பு வழக்கு அடுத்த ஜூன் 2-ந்௳ தவணைபோடப்பட்டது.

ஸ்ரீமாந் தாஸ் மீண்டும் தேர்ந்தெடுக்கப்ட்டார்:—மிதுனபுரித் தொகுதியில் ஸ்ரீமாந் தாஸுக்குப் போட்டியாகயாரும் அபேட்சகராக நில்லாத படியால் அவர் போட்டியின்றி வங்காள சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்.

ஜப்பான் மந்திரியும் வெடிக்குண்டும்:—ஜப்பான் அந்நியநாட்டு மந்திரியாகிய வெல்லிங்டன் கோவின் என்பவருக்குக் கொடுக்கப்பட்ட ஒரு பெட்டியை அவருடைய வேலையாட்கள் மூவர் திறந்தபொழுது அதிக வேகத்துடன் ஒரு குண்டு வெடித்தது. மூவரும் படுகாயமுற்று ஆபத்தான நிலையிலிருக்கின்றனர். மந்திரி காயமின்றித் தப்பிக்கொண்டார்.

புதிய ஜெர்மனி:—கோர யுத்தத்தில் தனது வியக்கத்தக்க சக்தியை யெல்லாம் இழந்து இப்போது செயலற்றுப் போயிருக்கும் ஜெர்மனியைப் புனருத்தாரணஞ் செய்யும் புனிதவேலையை அந்நாட்டு வாலிபரே மேற்கொண்டிருக்கின்றனர். அவர்கள் இப்போது ஆத்மீக வாழ்க்கையை நாடுகின்றனர். அறவளர்ச்சியைப் பிரதானமாகக் கருதுகின்றனர். அவர்களனைவரும் இப்போது புகைச்சுருட்டுக் குடித்தல் முதல் மதுபானம் ஈறான துர்வழக்கங்களை அறவே ஒழித்து விட்டனராம். நாடுமுழுவதும் சஞ்சரித்து ஜனங்கட்கும் இத்தகைய துர்ப்பழக்கங்களை விட்டுவிடுமாறும், உடைகளின் ஆடம்பரங்களை வெறுக்குமாறும் போதித்து வருகின்றனராம். ஜெர்மானியவாலிபரின் முயற்சியால் ஜெர்மனி புத்துயிர்பெற்றெழப்போகின்றது.

தேசோபகாரி.

### தேகவியோகம்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியராகிய ஸ்ரீ T. தம்பிப்பிள்ளையவர்களின் மனைவியார் சென்ற சனிக்கிழமை பின்பகல் 4 மணிவரையில், தமது வீட்டிற்கு வெளியே தெருவிற் சென்ற குழந்தையை மொட்டர்ரத ஆபத்தினின்றுங் காக்கும்படி சென்று குழந்தையைக் காத்துத் தான் அந்த ரதத்திற்கு இரையாயினர். குழந்தையை மீட்கும்பொருட்டுத் தன் னுயிரைத் திரணமாக நினைத்து உயிர் மாண்ட இவ்வுத்தமியின்பொருட்டு அனுதாபப்படாதார் எவருமில்லை.

### ஒரு நன்மையான கருமம்.

இற்றைக்கு அநேகவருடங்களுக்கு முன் சிறந்த சமயாபிமானிகளால் ஸ்தாபிக்கப் பட்டும், தகுந்த வித்துவான்களாலும் ஆசிரியராலும் கந்தபுராணப்பிரசங்கம் செய்யப்பெற்றும் வந்தகந்தர்மடத்திலுள்ள கந்தபுராணமடம் சென்றசிலவருடங்களாக நிலைகுலைந்து கட்டடமும்சிதைந்து பழுதுற்றுப் புராணப்பிரசங்கமும் நடைபெறுவொழிந்தது. இதனைக் கண்ணுற்ற (அங்குள்ள) சமயாபிமானிகளாகியபிரபுக்களும் உத்தியோகஸ்தரும் வியாபாரிகளும் ஏனையோரும் அதனை முன்னுள்ள மேலான நிலைக்குக் கொண்டுவரும் பொருட்டுச் சென்ற இரவு ஷை மடத்தில் ஓர்சபை கூட்டினர். அத்தருணம் பண்டிதர் ஸ்ரீ ச. அம்பலவாணரவர்களின் அக்கிராசனத்தின்கீழ் நீர்வேலிவாசர் சிற்சபேசன் அவர்களால் "சமயபரிபாலனம்" என்னும் விஷயமாக ஓர் உபந்நியாசம் செய்யப்பட்டது. யாழ்ப்பாணம் வைத்தியசாலைத் தலைமை வித்தர் ஸ்ரீ செ. மயில்வாகனம் அவர்கள் விசேஷகுறிப்புரை கூறினர். இத்திருத்தொண்டிற்காக ஓர் சபையை ஸ்தாபிக்கும் பொருட்டும் அதற்கேற்ற ஒழுங்குகளைச் செய்யும் பொருட்டும் வருகிற ஞாயிற்றுக்கிழமை இரவு ஏழு மணிவரையில் ஷை மண்டபத்தில் ஓர் கூட்டம் நடைபெறும். இச்சிவதருமம் இடையூறின்றி நிறைவேறும் பொருட்டுத் திருவருள் முன்னிற்பதாக.

### அளவெட்டி தம்பளாவளை விநாயகராலய மகோற்சவமும் பிரசங்கமும்.

இவ்வாலயமகோற்சவம் கிகழும் இரத்தாக்ஷி௵ சித்திரை27௳ துவஜாரோகணமாகிச் சிறப்பாய் நடைபெற்றது. 6ம் விழாநாளாகிய வைகாசி௴ 1௳ புதன்கிழமைபகல் சங்கரலிங்க சுவாமிகளால் ஆலய வழிபாடு என்னும் விஷயமும் இரவு 8மணி தொடக்கம் 11மணி வரையும் சைவப்பிரசாரகர் த. குமாரசுவாமிப்பிள்ளை அவர்களால் திருநீலகண்ட நாயனார் சரித்திரமும் பக்கவாத்திய சகிதமாகக் கேட்போர் மனம் உருகும்படி பிரசங்கம் செய்யப் பெற்றபின் கற்பூரதீபமே திருவிளக்காக அடியார்களால் ஓதப்படும் அருட்பாக்களின் ஓசையும் அரஹர மகாதேவ என்னும் ஒலியும் காதின்வழி சென்றும் இடையறாப் புட்பமாரிக்கிடையே பெருமான் எழுந்தருளிவீதிவலம்வந்த காட்சி கண்ணின் வழியாகச் சென்றும் யாவரையும் மனமுருகிப் பரவசமாகச்செய்து இவ்விழாவின் உபயகாரர் த. நாகலிங்கம்பிள்ளை முதலியோரது அன்பையும் வெளிப்படுத்தி விட்டது. இதனைப் பின்பற்றியாவது இப்படியான காலங்களில் வாண வேடிக்கை தாசியர்நடனம் ஆதிய வீண் செய்கைகளில் பொருளை விநியோகஞ் செய்து சுவாமி தரிசனத்துக்கு வருவோர் மனதிற் பயங்கரமும் பாவசங்கற்பமுங் குடிகொள்ளாதபடி யாவரும் இப்படிச் செய்து இஷ்டசித்தி பெற்று உய்யும் வண்ணம் விக்கினேஸ்வரப் பெருமான் திருவருள் செய்வாராக.

—ஒருத.

(3-ம் பக்கம் 7-ம் பந்தித் தொடர்.)

## சுகாதாரம்.

### காற்று.

(முற்றொடர்)

காற்றிலே நோயை உண்டுபண்ணக்கூடிய ஜீவனுக்கள் இருப்பதாக முன் சொன்னேன். இவைகள் சூரியனின்வெளிச்சத்தாலும் சூட்டினாலும் கொல்லப்பட்டுப்போகின்றன. சூரியனின் வெளிச்சமில்லாத இடங்களில்தான் இவைகள் பதுங்கியிருப்பன. ஆகையால் வீட்டினுள்ளும், வீட்டின்மறைவான மூலை முடக்குகளினுள்ளும் சூரியனின் வெளிச்சம் வந்து சுத்திசெய்யும்பொருட்டுக் கதவு ஜன்னல்களைத் திறந்துவிடல்வேண்டும். காற்றும் வெளிச்சமும் வரக்கூடாத மாதிரியாய் அமைக்கப்பட்ட இருட்டான வீடுகளில் வௌவாலும், வண்டுகளும், சிலந்திப்பூச்சிகளும், கட்டுவக்காலிகளும், கொடுக்கன்களும், கறையான்களும், கெட்ட நாற்றமும் இருப்பதை கவனித்திருப்பீர்களென்று நம்புகிறேன். இவையெல்லாம் வீட்டினுள் போதிய சூரியனின் வெளிச்சம் தரிசனை செய்யாமையினால் உண்டானவை. சூரியனின் வெளிச்சம் மனிதனின் வளர்ச்சிக்கும் இன்றியமையாதது. உதாரணமாய் ஓர் பூஞ்செடியை வெளிச்சமில்லாத ஓர் அறையில் சில தினங்களுக்கு வைத்துப் பாருங்கள். இரண்டொரு நாளையில் கரைத்துச் சிலநாட்களால் பட்டுப்போகின்றது. வீட்டுவிறுந்தையில் வெளிச்சம் படக்கூடிய மாதிரியாய் வைத்தால் நல்ல செழிப்பாய் வளர்ந்து, நல்ல வனப்பான பூக்களைக் கொடுக்கின்றது. சூரியனின் வெளிச்சம் நோயையும் கண்டிக்கக்கூடிய குணமுடையது. வெளிச்சத்தாலேயே சில இரண நோய்களையும், நாட்பட்ட புண்களையும் மாற்றுகிறார்கள். சுவாமி ராமசாகரர் தமது ஹாதாயோகமென்னும் நூலிலும் "எப்பேர்ப்பட்டவர்களும் அதிகாலையில் அரையில் ஒரு சிறுத் துண்டோடு சூரியனின் வெளிச்சம் தேகத்தில் படும்படி சொற்பநேரம் நிற்றல் அதிக உத்தம" மென்கிறார்.

ஆகையால் ஒவ்வொருவரும் தாங்கள் வீட்டில் இருக்கும்பொழுதும், சயனிக்கும்பொழுதும் கதவு, யன்னல்களைத் திறந்துவிடவேண்டும். இரவில் சயனிக்கும்பொழுது வீட்டினுள் சயனிப்பதிலும்பார்க்க வீட்டு விறுந்தையில் சயனித்தல் அதிக உத்தமம். கடும் குளிராயிருந்தாலொழிய மற்றும்படி குளிரைப்பற்றிப் பயப்படத் தேவையில்லை. படித்துப் பழகிவிட்டால் குளிர்பிடிப்ப தருமை. தூசி சுவாசிக்கும்பொழுது சுவாசப் பைக்குள் போகாவண்ணம் மூக்கின் முன் துவாரங்களில் இயற்கையால் அடர்ந்தமயிர்கள் அமைக்கப்பட்டுள்ளன. நாம் காற்றைச்சுவாசிக்கும்பொழுது இம்மயிர்களானவை தூசிகளை வடிகட்டிச் சுத்தமான காற்றாய் உள்ளுக்குப் போக விடுகின்றன. இச்சுத்தமான காற்று உள்ளிருந்து பின் அசுத்தமாய் வரும்பொழுது முன் மூக்குமயிர்களால் வடிகட்டப்பட்ட தூசிகளைக் காற்றிலே தள்ளிவிடுகின்றது. இப்படித் தள்ளிவிடப்படுவதால் மூக்குத் துவாரங்களும், ரோமங்களும் வடிகட்டப்படும் தூசிகளால் அழுக்காக்கப்படாது மேன்மேலும் சுவாசிக்கும் காற்றை வடிகட்டப்படும் நிலையில் வைக்கப்படுகின்றன. இதனால்தான் எங்கள் நன்மைக்காய் அமைக்கப்பட்ட மூக்கு ரோமத்தைச் சௌளஞ் செய்யக்கூடாதென்பது. மூக்குத்துவாரங்கள் தூசிகளை வடிகட்டுவது மாத்திரமல்ல, சுவாசிக்கும் காற்றைச் சுவாசப்பைக் குவப்பாய்ச் சூடாக்கிக் கொடுக்கின்றன. காற்றோடு போகும் ஜீவனுக்களையும் ஒருவாறுகொல்லுகின்றன. ஆகையால் எப்பொழுதும் காற்றை நாசியாலேயே சுவாசித்தல்வேண்டும். அப்படியில்லாது வாயால் சுவாசித்தல் சுகாதாரத்திற்கு நேர்விரோதமான செய்கை. கசம்போன்ற நோய்கள் இப்படிச சுவாசிப்பதால் வருவது வழக்கம்.

சாதாரணமாய் நாம் சுவாசிக்கும்பொழுது காற்றை வெகு கெதியாய் இழுத்துக் கெதியாய் விடுகின்றோம். இப்படிச் சுவாசித்தால் சுவாசப்பையின் எல்லாப் பாகங்களும், முக்கியமாய் மறைவான பாகங்கள் சுவாசிக்கப்பட்ட காற்றோடு சம்பந்தப்படுகின்றனவல்ல. இதனால் நாம் பெறக்கூடிய பிராண வாயுவையும் "பிராணனையும்" பெறு திழக்கிறோம். சுவாசப் பைக்குள் இழுத்த காற்றை நிறுத்தாது சடுதியாய் விடுவதால், சுவாசப்பைக்குச் சுத்திசெய்யப்படும் நோக்கமாய் வரு மிரத்தமானது, போதிய பிராணவாயுவையும், "பிராணனையும்" எடுத்துக்கொண்டு, அசுத்தமான கரிநிலவாயுவை கொடுத்துச் செல்ல நேரம் போதாமையினால், பூரண சுத்தமாய்த் திரும்பி இரததாசயத்திற்குச் செல்கின்றதில்லை. ஆகையால் சுவாசிக்கும்பொழுது காற்றை நாசியால் நல்லாய் இழுத்துச் சொற்பநேர மடக்கிப் பின்விடவேண்டும். இப்படிப் பிராணாயாமம் ஒருநாளைக்கு ஐம்பது முறைக்குக் குறையாமலாகுதல் சிறுவர் சிறுமிகளும், ஆடவர் ஸ்திரிகளும் செய்துவருதல் உத்தமோத்தமம். நோயாளிகள் பிராணாயாமம் செய்வதால் நோயை மாற்றுகிறார்கள். தேகசௌக்கிய முள்ளவர்கள் வராதுதடுக்கிறார்கள்.

S. M.
பகான்.

## ஓர் பாதிரியின் அதிசயச்செயல்.

கிருஸ்தவப் பாதிரிமார் நம் நாட்டில் பாடசாலைகள் வைப்பதும், தருமச் செயல்கள்போல் அவர்கள் செய்யும் வேறு காரியங்களும், நம்மவர்களைக் கிருஸ்து மார்க்கத்தில் சேர்க்கவேண்டியதற்காகச் செய்யும் தந்திரங்களேயாகும். ஆகையால் அவர்கள் பாடசாலைகளுக்கு நமது மக்களை யனுப்பலாகாதென்று அடிக்கடி பலபத்திரிகைகளிலும் எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும், பட்டபின்பே புத்திவரும் சுபாவமுடைய நம்மவரில் பெரும்பாலார் இன்னும் அதைக் கவனியாமலேயிருக்கிறார்கள்.

இப்போது ஆம்பூரில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தைப்பற்றி ஈண்டு கூறுகின்றோம். இதனாலேனும் நம்மவர் உண்மையறிந்து இனியேனும் எச்சரிக்கையாய் நடந்துகொள்வார்களென்று நம்புகிறோம். இந்த விஷயத்தைப்பற்றி 14-3-24 இல் வெளியான "ஹிந்து" பத்திரிகையில் ம-ா-ா-ஸ்ரீ S. மூர்த்தி என்பவரால் வரையப்பட்ட சங்கதியைச் சுருக்கமாக ஈண்டு வெளியிடுகிறோம்.

"கடந்த 10 அல்லது 12 வருடங்களாக இவாஞ்செலிகல் லூதரன் மிஷன் பாதிரிமார்கள் இப்பிரதேசங்களில் அன்னிய மதஸ்தரைக் கிருஸ்தவராக்கும் வேலையைச் செய்து வருகிறார்கள். அதனால் இப்போது ஆம்பூரிலும் அதைச் சுற்றியுமுள்ள இடங்களிலும் சுமார் 300 பேர் கிருஸ்துமார்க்கத்தில் சேர்ந்திருக்கிறார்கள்; அவர்களில் பெரும்பாலார் தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று கருதப்படுவோரே யாவர். கடந்த நவம்பர்மீ ரெவரெண்ட் போரியாந் என்ற பாதிரியார் மேற்கண்ட வேலையின் ஸ்தானத்திற்கு வந்தார். அவர் அங்குள்ள மிஷன் உயர்தரப் பாடசாலைக்கு (ஹைஸ்கூல்) மனேஜராகவும் அமைக்கப்பட்டார். அவர் வேலையை யொப்புக்கொண்டவுடனே முதலில் செய்த காரியம் என்னவெனில், அப் பாடசாலையிலிருந்த ஹிந்து உபாத்தியாயர்களை யெல்லாம் வேலையிலிருந்தும் நீக்கிவிட்டார். பிறகு தமது பாடசாலையில் வாசிக்கும் பிள்ளைகளைக் கிருஸ்து மார்க்கத்தில் சேரும்படி பலவந்தப்படுத்தி, அப்படிச்சேர மறுத்தவர்களுக்கு அவர்கள் நடக்கையைப்பற்றி நற்சாட்சிப்பத்திர மளிக்கமாட்டேனென்று பயமுறுத்தினார். இது விஷயமாக ஜில்லா கல்வியிலாகா அதிகாரி செய்த விசாரணையைப்பற்றி இப்பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறோம். பாதிரியார் பிள்ளைகளைக் கிறிஸ்தவமதத்தில் சேரும்படி வற்புறுத்திய விஷயத்தைப்பற்றி ஜில்லா கல்வியிலாகா அதிகாரி கேட்டபோது, அப்பாதிரியார் "இந்தியச் சிறுவர்களின் கல்வியைப்பற்றி நமக்கு அக்கறையில்லை. இவர்களைக் கிறிஸ்தவர்களாக்குவதற்கே நாம் இங்கு வந்திருக்கிறோம்" என்று கூறினார்.

நேயர்களே! இப்பாதிரியார் உண்மையைக் கூறியதைப்பற்றி நாம்சந்தோஷமடைகிறோம். பாதிரிமார்கள் சம்பளத்திற்கு இங்கு வந்து வேலைசெய்வது நம் நாட்டார் கல்வி கற்கவேண்டுமென்பதற்கல்ல நம்மவரை எந்தத்திறத்தாலேனும் கிறிஸ்துமதத்திற் கிழுப்பதே அவர்கள் நோக்கம்.

இந்த உண்மையை ஒரு பாதிரியாரே கூறக்கேட்ட பின்பேனும் நம்மவர்கள் கல்வி கற்பதற்காகத் தம் மக்களை அவர்கள் பள்ளிகளுக்கனுப்பாமலும், வீட்டிலுள்ள பெண்களுக்குக் கல்வி கற்பிப்பதற்காகப் பைபில் உமன் (பெண்)களை வீட்டிற் சேர்க்காமலும் எச்சரிக்கையாயிருக்கவேண்டியது நம் கடமையாகும்.

ஆனந்தபோதினி.

## மேனாடுகளின் வழி கூடாது.

அரசியல் விஷயங்களில் பல கட்சிபேதங்களுடன் கூடிய பார்லிமெண்டு ஆட்சி முறை தேச முன்னேற்றத்தை உண்டாக்காது என்பது மகாத்மாவின் அபிப்பிராயம். இப்போது ஏப்ரல்மீ 28உ ஸீபூகாவில் கலாசாலையொன்றில் லார்டுரொனால்ட்ஷே பின்வருமாறு பேசியிருப்பது கவனிக்கத்தக்கது.

"மேனாட்டு அரசியல் முறையை முக்கிய ஆதாரமாகக்கொண்டும் இந்திய வழியை ஆங்காங்கு சிறிது சேர்த்தும் நாம் இந்தியாவில் ஒரு ஆட்சிமுறை ஸ்தாபிக்க வேண்டுமென்று முயற்சி செய்து பன்முறை தவறு செய்துவிட்டோம். நாம் இத்தேசத்தில் வளர்த்துக் கொண்டு இந்தியாவிலும் ஏற்பாடு செய்ய முயன்றுவரும் திட்டம் இந்தியாவுக்கு மிகச் சிறந்த முறையென்று நான் நிச்சயம் சொல்ல முடியாது. மேனாட்டுத் திட்டங்களின்றி இக்

திய திட்டங்களின் ஆதாரத்தைக் கொண்டு அமைக்கவேண்டுமானால் மைசூர் அரசியல் திட்டத்தைக் கவனிக்கலாம். தற்கால இந்தியா இனி பலமாக நிற்கவேண்டுமானால் மேனாட்டு அரசியல் நிர்மாண சிற்பிகள் கீழ் நாட்டுச் சிற்பிகளுடன் கலந்து மிக அழகிய கீழ்த்தேச அரசியல் அமைப்பை நிர்மாணம் செய்யவேண்டும்.

லார்டு ரொனால்ட்ஷே எந்த எண்ணங் கொண்டு இவ்விதம் பேசினாரோ யாமறியோம். இவரது மொழிகளைக் கவனித்தால் இவர் அரசியல் விஷயங்களில் உண்மையைக் காண அவாக் கொண்டுள்ளாரென்பது விளங்குகின்றது. மேனாட்டு முறையில் பல தீமைகள் இருக்கின்றனவென்பதைப் பல அறிஞரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். அக்குறைகளை நீக்க வழியென்னவென்று ஆராய்ந்தபின் தியாகசக்தி வெளிப்படக்கூடிய அரசாங்க அமைப்பு இந்தியாவில் நாட்டப்படவேண்டும். பிறகு அவ்வித அமைப்பு மேன்மையானதென்று கருதி மேனாட்டவரும் தம் தேசங்களின் அரசாங்கத்தை மாற்ற முயலுவர். இந்த வேலையில் இந்திய சமூகத்தின் மனதை முதன் முதல் திருப்பிவிட்டவர் மகாத்மா காந்தியே என்பதை எவரும் ஒப்புக்கொள்ள வேண்டும். இந்தியாவிற்கு மாத்திரமேயன்றி எத்தேசத்திற்கும் தியாக பலத்துடன் கூடிய அரசாங்கமே சிறப்புடையது. ஆதலால் மகாத்மாவின் திட்டங்களுக்கு வெற்றி கிடைப்பதே உண்மையில் லார்டு ரொனால்ட்ஷேயின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வதாகும். கிராம சபைகளும் தொழில் செய்வோரின் கூட்டுறவுகளுமே இந்தியாவுக்கு இயற்கையில் ஏற்பட்ட அங்கங்களென்றும் இவற்றினிடம் அரசாங்க காரியங்கள் விடப்பட்டு மத்திய அரசாங்கத்தார் யோசனை கூறுவது மாத்திரமே தம் கடமையாகக் கொள்ள வேண்டுமென்றும் லார்டு ரொனால்ட்ஷே கூறிய மொழிகள் மிக்க அறிவுடைமையைக் காட்டுகின்றன. இவ்வழியில் ஆராய்ச்சி செய்யும் ராஜதந்திரிகள் இருக்கிறார்களா?

நவசக்தி.

---

## மாமிஸ பக்ஷணத்தால் நேரும் கேடுகள்.

### ஐரோப்பிய நிபுணரது அபிப்பிராயம்.

(முற்றொடர்)

### பலத்திற்காக மாமிஸ பக்ஷணம் செய்ய வேண்டியதில்லை.

தேக பலத்திற்காக மாமிஸத்தை உட்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்று நான் தற்பொழுது எடுத்துக்காட்ட விரும்புகின்றேன். நான் சீனாவில் வேய்—ஹவேய் என்னுமிடத்தில் தங்கியிருந்தேன். அப்பொழுது அங்கு பிரிட்டிஷ் கப்பற்படையும் தங்கியிருந்தது. 7000 மாலுமிகள் இருந்தனர். தரையிலோவெனில் 700 சீனசிப்பாய்கள் இருந்தனர். அவர்கள் சனியன்படையைச் சேர்ந்தார்கள். பிரிட்டிஷ் மாலுமிகளுடைய பலத்தைச் சீனர்களுக்கு எடுத்துக்காட்டுவதற்காக பளுவான பொருள்களைத் தூக்கும் போட்டி ஒன்று நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் கலந்துகொள்ள வரும்படி சீனர்கள் அழைக்கப்பட்டனர். அவர்கள் ஒவ்வொரு அம்சத்திலும் பிரிட்டிஷ் மாலுமிகளைத் தோற்கடித்து விட்டனர். இச்சீன சிப்பாய்கள் ராணுவத்தில் சேரு முன்பு மாமிஸத்தையே உட்கொள்ளாமலிருந்து வந்தார்கள். ராணுவத்தில் அவர்களுக்குத் தினம் ஒரு பவுண்டு மாவும் 1 இராத்தல் அரிசியும் (தீட்டப்படாதது) கொடுக்கப்பட்டு வந்தது. ஞாயிற்றுக்கிழமையன்று அவர்களுக்கு 1 இறாத்தல் மாமிசம் கொடுப்பதுண்டாம்.

